# தெற்கிலும் புலிகளுக்கு எதிராக யுத்த பிரகடனம்?

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 09 இதழ் 287
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 24 — 11 — 1992

(கொழும்பு)
தெற்கிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசு 'யுத்தப் பிரகடனம்' ஒன்றை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது தலைநகரிலும், தெற்கின்
(2ம் பக்கம் பார்க்க)

## சுழிபுரம் பகுதியில்

# அகோர ஷெல் தாக்குதல்

# ஐவர் பலி; பலர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
மாதகல் பகுதியில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று காலை சுழிபுரம் பகுதியை நோக்கி நடத்திய அகோர ஷெல் தாக்குதல்களினால் இரு பெண்கள் உட்பட ஐந்து பொதுமக்கள் பலியானார்கள்- பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். ஐம்பதிற்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன. சுழிபுரம் பகுதி அதிர்ந்தது.

## உயிரிழந்து, காயமடைந்தோர்

இக்கோடூர ஷெல் தாக்குதலினால் காட்டுப்புலத்தை சேர்ந்த புன்னன் ஆனந்தன் [45 வயது] பாண்டுவெட்டையை சேர்ந்த முத்தன் தவத்துரை [35 வயது] குடாக்கனையை சேர்ந்த திருமதி அரியகுட்டி தவமணி (45 வயது), திருமதி இராசு தவமணி (42 வயது] ஸ்தத்திலே உடல் சிதறி துடிதுடித்து பலியானார்கள். குடாக்கனையை சேர்ந்த பண்டாரி தியாகராசா (45 வயது] கடும்காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார். இச்சம்பவத்தில் காயமடைந்தோர் விபரம்;

கந்தன்ஞானசேகரம் [14 வயது], பிள்ளையார் பிரதீபன் 10 வயது], பொன்னப்பா பிள்ளை சிவகணேசன் (22 வயது), ஐயன் ஆறுமுகம், தரமரட்ணம் (27 வயது) தியாகராசா (42 வயது), என். சிவகுமார [13 வயது]. காரைநகர் கலைவேம்படியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த இராசரட்ணம் செல்வரட்ணம் (17 வயது) ஆகியோர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பலர் சிறுகாயங்களுக்குள்ளாகி சங்கானை, மூளாய், வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

## 'செயின் புளக்' புதைந்தது

மாதகல்-சம்பில்துறைப் பகுதியில் சேற்றில் இராணுவத்தினரின் 'செயின் புளக்' ஒன்று அதிகாலை புதைந்துவிட்டது. அதை மீட்கும் முயற்சியில் ஈடுபட்ட பெருமளவு படையினர் தங்கள் பாதுகாப்பிற்காகவே குடியிருப்புகளை நோக்கி அகோர ஷெல் தாக்குதலை மேற்கொண்டதுடன் தொடர்ச்சியான துப்பாக்கி பிரயோகத்தினையும் மேற்கொண்டனர். 'செயின் புளக்கை' மீட்கும் முயற்சியில் படையினர் பலமணி நேரம் ஈடுபட்டனர். படையினருக்கு உதவியாக ஹெலிகொப்டர்கள் வானில் வட்டமிட்டபடி இடைக்கிடை தாக்குதலை நடாத்தின. படையினர் மீட்பு முயற்சியில் தீவிரமாயிருந்தனர்.

## புலிகள்-ராணுவம் மோதல்

மாதகலில் நிலைகொண்டுள்ள படையினர் கரையோரமாக திருவடிநிலை-பொன்னாலையை நோக்கி முன்னேற முயன்றபோது இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையில் கடும் மோதல்கள் வெடித்தன. காலை 7மணி முதல் நண்பகல் 12 மணிவரை மோதல்நடைபெற்றது. அகோர ஷெல் தாக்குதலுடன் சடும் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுக்கள் 5 மணிநேரம் கேட்டவண்ணமிருந்தது. இறுதியில் படையினரின் முயற்சி தோல்வியடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பல வீடுகள் தீப்பற்றின

தொடர்ச்சியான ஷெல் தாக்குதலினாலும், பீரங்கி தாக்குதலினாலும் சுழிபுரத்தி ஊர்மனைகளில் ஏழைமக்களின் வீடுகள் பல தீப்பற்றி எரிந்தன. சுமார் 50 வீடுகள் இவ்வாறு முற்றாக சேதமடைந்துள்ளன. பல வீடுகள் அதிர்வினால் கதவுகள், யன்னல்கள் நொருங்கின. எரிந்த வீடுகளிலிருந்த பெறுமதியான பொருட்களும் முற்றாக நாசமடைந்துள்ளதாக குடியிருப்பாளர்கள் பலர் தெரிவித்தனர். அகோர ஷெல் தாக்குதலினால் தீப்பற்றிய வீடுகளை அணைக்க முடியாதவொரு] துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டது.

## 100 க்கும்மேல் ஷெல் தாக்கு

மாதகல், அளவெட்டி, காரைநகர் படைமுகாம்களிலிருந்து காலை 7-00 மணி முதல் நண்பகல் 12-00 மணி வரை தொடர்ச்சியாகவும் விட்டு [விட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டன. இச் ஷெல்கள் சுளிபுரம் திருவடிநிலை நெல்லியான்
[4-ம் பக்கம் பார்க்க]

## 2,000 தமிழர்கள் கொழும்பில் விசாரணை

(கொழும்பு)
கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோவின் கொலை தொடர்பாக கொழும்பி இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் பொலிஸாரால் விசாரணை செய்யப்
(2ம் பக்கம் பார்க்க)

## 5000 போராளிகள் உயிர்த் தியாகம்

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகிய காலத்திலிருந்து இன்று வரை 5,000 போராளிகள் மக்களுக்காக மடிந்திருக்கிறார்கள் மக்கள் சுதந்திரத்துக்காக, பாதுகாப்புக்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளார்கள். மக்களின் விடிவுக்காக மரணத்தைத் தழுவிக்கொண்ட இந்த மாவீரர்களுக்கு ஆண்டு தோறும் விழா எடுக்கத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முடிவு செய்துள்ளது.

முதலில் களத்தில் மடிந்த சத்தியநாதன் (லெப். சங்கர்) உயிர் நீத்த நாளை (கார்த்திகை 27) தேசிய சுதந்திர தினமாகத் தமிழீழம் எங்கும் கொண்டாடி, எமது தியாகத் தீபங்களை நினைவில் ஏற்றி வைக்குமாறு எமது மக்களை அன்புடனும், உரிமையுடனும்
(2ம் பக்கம் பார்க்க)

## மாவீரர் தினத்தில் மக்கள் சமூகப்பணிகளில் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)
மாவீரர் வாரத்தின் மூன்றாம்நாள் நிகழ்வுகள் நேற்று கொடிவணக்கத்துடன் ஆரம்பமானது. மாவீரர் திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மக்கள் எல்லோரும் நேற்றும் மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.
(2-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் இராணுவம் முழு உஷார் நிலையில்

(கொழும்பு)
கொழும்பில் விடுதலைப்புலிகளின் எந்தத் தாக்குதலையும் சமாளிக்கும் விதத்தில் பாது காப்புப் படையினர் முழுத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்
(2ம் பக்கம் பார்க்க)

## நாட்டிலுள்ள அனைவரும் பொலிஸில் பதியவேண்டும்

(கொழும்பு)
இலங்கையில் வசிக்கும் அனைத்து மக்களும் தமது பெயர் விபரங்களை பொலிஸாரிடம் பதிவு செய்யும் புதிய திட்டம் ஒன்று விரைவில் நடைமுறைக்கு வரவுள்ளதா
[2ம் பக்கம் பார்க்க]

## வாணிபம் தொழில் முயற்சி பதிவுக் காலக்கெடு நீடிப்பு

[யாழ்ப்பாணம்]
தமிழீழத்தின் வடபகுதியில் வாணிபம் மற்றும் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோர் அனைவரையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையில் பதிவு செய்து
(2-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு இணைந்தால நாடு பிளவுபடுவது நிச்சயம்

[கொழும்பு]
வடக்கு-கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்பட்டால், நாடு பிளவுபடுவது நிச்சயம் என திரு. தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றில் தெரிவித்தார்.
(2-ம் பக்கம் பார்க்க)

## மினிபஸ் மோதி மாணவன் ஸ்தல பலி

(யாழ்ப்பாணம்)
நேற்று நண்பகல் 12-15 மணியளவில் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி தட்டாதெருச்சந்தியில் மினிபஸ் மோதியதில் தனியார் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் ஸ்தலத்திலே துடிதுடித்துப்பலியானார்.
[2ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### வினுத்தாள்
### (ஆண்டு 4 முதல் ஆண்டு 11)

எமது நிறுவனத்தால் நடாத்தப்பட்ட 3-ம் தவணைப் பரீட்சை (சகலபாடம்) வினுத்தாள்களையும், ஆண்டு 6 அனுமதி, ஆண்டு 5 புலமைப் பரிசில் வினுத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலயம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6991)

### விற்பனைக்கு

வியாபாரிகள் தங்கள் வியாபார ஸ்தாபனத்தை விளம்பரம் செய்வதற்கு தேவையான கலண்டர்கள் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் தகுந்த கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம். அச்சுப்பதிவு செய்யப்படாத கலண்டர்கள், சிலிப்புகள் விற்பனைக்குண்டு. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். [எ-2602]

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வ, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம். 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-6954)

### மணமகள் தேவை

ஆண், பெண் இருபாலாருடைய ஜாதகக் குறிப்புகளும் எம்மிடம் உண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி. A. C. மகேந்திரன் நீர்வேலி வடக்கு (அரசகேசரிப் பிள்ளையார் வீதி) நீர்வேலி. (எ-2610)

### ஆண்டு 6 - அனுமதி
### ஆண்டு 5 - புலமைப்பரிசில்

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 அனுமதி மாதிரிப் பரீட்சையும், ஆண்டு 5 புலமைப்பரிசில் (1993) மாதிரிப் பரீட்சையும் 29-11-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப 11-00 நடைபெறும். பதிவு செய்யவும் புதிய கல்வி நிலயம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். சி-7000

### கொழும்பில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பில் புலிகள் புதிய தாக்குதலை நடாத்தலாம் என்ற தகவல்கள் கிடைத்துள்ளதையடுத்தே இந்த ஏற்பாடெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பல புதிய அவசரகால சட்டவிதிகள் மேலும் அமுல்படுத்த அரசு முனைந்து வருவதாகவும் செய்திகள் தெரிவக்கின்றன. (சி)

### வடக்கு-கிழக்கு
(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில்: இனப் பிரச்னைத் தீர்வு தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் ஒரே கொள்கையைக்கொண்டிருக்க வேண்டும் என்றார்.

இதேவேளை நேற்று நாடாளுமன்றில் பேசிய பல எம். பி.க்கள் யுத்தத்தை உடனடியாக நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர். (சி)

## திருமலை — தீவகம்
## பயணிகள் கப்பல் சேவை
# நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

திருமலை - தீவகத்திற்கான வாரம் ஒருமுறை நடாத்தும் பயணிகள் கப்பல் சேவை நேற்று திருமலையிலிருந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

'நியூகோரம்' என்ற பெயரைக்கொண்ட சிங்கப்பூர் கப்பல் இச்சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும் இன்று மீண்டும் இக் கப்பல் திருமலைக்கு புறப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஒருவருக்கு 100 ரூபாவே பயணக்கட்டணமாக அறவிடப்படுமென்றும் காரைநகர் கோவளம் ஊர்காவற்றுறை ஆகிய இறங்கு துறைகளிலும் பயணிகள் இறங்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பல் ஒருமுறை சேவையில் ஈடுபட சுமார் 77 ஆயிரம் ரூபா செலவாகுமெனவும் கூறப்படுகிறது. (ம)

## வடமராட்சியில்
# மலேரியா தடுப்பு நடவடிக்கை

(தாளையடி)

வடமராட்சி கிழக்கில் நுளம்புத் தொல்லையும் மலேரியா பரவும் வாய்ப்பும் அண்மைக் காலத்தில் அதிகரித்திருப்பதைச் சுட்டிக்காட்டி இலங்கை செஞ்சிலுவைச் சங்க வடமராட்சி கிழக்குப் பிரிவினர் யாழ்ப்பாணக் கிளையினூடாக இப்பகுதியில் உடனடியாக மலத்தியோன் தெளிக்கும்படி யாழ் பிராந்திய சுகாதார பணிப்பாளரை மகஜர் மூலம் கேட்டிருந்தனர்.

மலத்தியோன் கருவிப்பதில் கஷ்டம் இருப்பதினால் மலேரியாத் தடுப்பு ஊழியர் மூலம் இப்பகுதியிலுள்ள சகல மக்களுக்கும் மலேரியா எதிர்ப்பு வில்லைகளை வழங்கிவருகின்றனர்.

ஏற்கனவே மலேரியாக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்கு இரத்தப் பரிசோதனை செய்து பூரண சிகிச்சையும் வழங்கப்பட்டு வருகிறது. (168)

# 'வெளிச்சம்' சஞ்சிகை இன்று வெளிவருகிறது

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நினைவாக 'வெளிச்சம்' கார்த்திகை மாத இதழ் இன்று வெளிவருகின்றது.

தாயகத்தின் சுதந்திரத்துக்காவும், தமிழ் மக்களின் வாழ்வுக்காவும் தற்கொடை ஈகம் புரிந்த மாவீரர்கள் பற்றிய விடயங்களை உள்ளடக்கி இந்தஇதழ் வெளிவருகின்றது.

இந்த இதழில், தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் மாவீரர்கள் பற்றிய உணர்ச்சிபூர்வமான கருத்துக்களும், புதுவை இரத்தினதுரை, மார்க்கிரட் ரூபி, மு வே யோ. வாஞ்சிநாதன், வேலணையூர் சுரேஷ் ஆகியோரின் கவிதைகளும் திரு. தேவா, கரும்பறவை, செல்வி சாந்தி ஆகியவர்களின் போராட்ட நிகழ்வுகள் பற்றிய கட்டுரைகளும், சாந்தன், வசந்தன் ஆகியோர்களின் சிறுகதைகளும், சோ. பத்மநாதனின் விமர்சனம் ஒன்றும் இன்னும்பல விடயங்களும் இடம்பெற்றுள்ளன.

# இராசி பலன்

**23 11-1992**

**(தமிழுக்கு கார்த்திகை 08)**

திங்கட்கிழமை

அமாவாசை பி. ப. 3-25 வரை விசாகம் காலை 6-19 வரை மரணயோகம் இராகு காலம் மாலை 3-12 முதல் 4-42 வரை சுபநேரம் காலை 10-42 முதல் 12-2 வரை.

மேடம்: தொழில் நஷ்டம், குடும்பமுரண்பாடு, அலைச்சல்

இடபம்: தொழில் வாய்ப்பு, பணவரவு, குடும்பசுகம்.

மிதுனம்: குடும்ப அன்னியோன்யம், பயணம், சந்திப்பு

கடகம்: கடன் தொல்லை, இடையூறு, மனச்சஞ்சலம்.

சிங்கம்: சிறுநஷ்டம், மனஸ்தாபம், முன்கோபம்.

கன்னி: விஷேச நிகழ்ச்சி, பணவிவகாரம், காரியசித்தி.

துலாம்: மனச்சோர்வு, சகோதரர் பகை, கடமை தவறுதல்.

விருச்சிகம். சன்மானம், எதிர்பாராதசெலவு, தொழில் லாபம்.

தனுசு: குடும்ப உறவில் விரிசல், பணமுடை, உடல் ரோகம்.

மகரம்; தொழில் பிரகாசம் காரிய அனுகூலம், மனநிம்மதி.

கும்பம்; புதிய சிந்தனை, வாழ்க்கைச்சுகம், நண்பர் வருகை.

மீனம்: உடல் அசதி, அதிகாரிகள் பகை, தொல்லை.

— ஜோஸ்யர்

## மரங்கள் விநியோகம்

(சுன்னாகம்)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராமமுன்னேற்றச் சங்கங்களுக்கும், சனசமூக நிலையங்களுக்கும் மகோகனி, வேப்பு, அகத்தி, அசோக் போன்ற மரக்கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டது. (137)

## இன்று

(ஏழாலை)

வட்டு. இரு. ஞானசம்பந்தா வித்தியாசாலையில் மாவீரர் விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து உரை நிகழ்த்துவர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (162)

0 0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக்கூட்டுறவாளர் நடாத்தும் மாவீரர் தினவிழா இன்று செவ்வாய்க்கிழமை மாலைஇரண்டுமணிக்கு யாழ். கஸ்தூரியார் வீதி... தினம் ம. மகாவித்தியாலயத்தில் யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சூ. சிறில் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் கூட்டுறவாளர்கள், யாழ். மாவட்ட தளபதி திரு. வ. செல்வராசா, யாழ் வட்டப்பொறுப்பாளர் திரு பொ. இளங்கோ, வலிகாமம் கோட்ட உதவி அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. செ. இளையவன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். பலகலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும், (163-56)

### மாவீரர் தினத்தில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மூன்றும் நாளும் சிரமதானம் மற்றும் சமூகப் பணிகளில் மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி தீவக கோட்டங்களில் நேற்று மாலை மாவீரர் நினைவுக் கூட்டங்கள் நடைபெற்றன (56)

### தெற்கிலும்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய பகுதியிலும் விடுதலைப் புலிகளுக்கு எதராக போர் நடவடிக்கையில் ஈடுபட பெருமளவு படையினர் இப் பகுதிக்கு அழைக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

தற்போது தெற்கில் எழுந்துள்ள பெரும் பீதியால் நகர்ப் புறங்களும், கிராமப் பகுதிகளும் இரவு நேரங்களில் விரைவிலேயே சத்தம் சந்தடியின்றி அடங்கிப் போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### 5000 போராளிகள்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுக் கொள்கின்றோம்.

வாழ்வின் உயிரைப் போல அளப்பரிய செல்வம் வேறு எதுவும் இல்லை என்பார்கள். அப்படியான உயிர்ச் செல்வத்தைத் தியாகம் செய்ய ஒருவன் துணிகின்றான் என்றால், உயிரினும் மேலான உன்னதமான இலட்சியம் ஒன்று இருக்கத்தான் செய்கிறது. இந்த உன்னதமான இலட்சியம் விடுதலை ஆகும். இந்த உன்னத இலட்சியத்துக்காகவே எமது போராளிகள் சாவைச் சந்திக்கின்றார்கள். அடிமையாக வாழ்வதைவிடச் சுதந்திரத்துக்காக மரணிப்பதில் அர்த்தம் உண்டு என்பதை உலகிற்கு உணர்த்துகின்றார்கள். இந்தச் சாவுகள் சாதாரண சாவுகள் அல்ல. சோகமான தனி மனித நிகழ்வுகள் அல்ல. இவை ஒரு புனித குறிக்கோளுக்காக, மனிதன் படைக்கும் அற்புதமான காவியங்களாகும். விடுதலைக்காக மரணிப்பவன் வரலாற்று நாயகன் ஆகின்றான்,

தமிழீழச் சமுதாயம் கட்டத்தட்ட 500 ஆண்டுகள் வரை அடிமை வாழ்வில் புரண்டு வருகின்றது. போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், சிங்களவர், இந்தியர்கள் என்ற வகையில் பல கட்டங்களில், பல வடிவங்களில் அடக்குமுறை எமது சமூகம் மீது திணிக்கப்படுகின்றது. இந்த 500 ஆண்டுகால அடக்குமுறை வரலாற்றில், புலிகள் இயக்கத்தின் தோற்றமும், வளர்ச்சியும், வீரம் செறிந்த போராட்டமும் மகத்தான புதிய சகாப்தத்தைப்படைத்து, ஆண்டாண்டு காலமாகத் தூங்கிக் கிடந்த தமிழீழ மண்ணில் ஆயுதப் போராட்டம் வடிவெடுத்தது.

மக்களின் விடிவுக்காக மடிந்த எமது மாவீரர்களை நினைவுகொள்ளும் இந்தப் புனித நாளில், எந்த உன்னத இலட்சியத்துக்காக அவர்கள் உயிரை அர்ப்பணித்தார்களோ, இந்த இலட்சியப் பாதையில் தளராது தொடர நாமும் உறுதி பூணுவோமாக.

நன்றி: உணர்வு.

### மினிபஸ்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து அளவெட்டிப் பகுதியில் வசித்து வரும், ஜோர்ஜ் சுரேஸ்குமார் (20 வயது) என்ற மாணவரே இவ்வாறு பரிதாபமாக மரணமானவராவார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கே. கே. எஸ். வீதியூடாக வேகமாக சென்று கொண்டிருந்த மினிபஸ்சே இவரை மோதியது. (56)

### 2,000 தமிழர்கள்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர்.

விசாரணை செய்யப்பட்டவர்களில் முன்னூறு தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ரி)

### நாட்டிலுள்ள
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஆயிரக்கணக்கான பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இத்திட்டத்தின் பிரகாரம் நாட்டிலுள்ள 1 கோடியே 70 லட்சம் மக்களும் மற்றும் ஆயிரக்கணக்கான வெளிநாட்டவர்களும் தமது பெயர் விபரங்களையும் பதிவு செய்து கொள்ளுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு-கிழக்குப் பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதால், இத்திட்டத்தை இப்பகுதிகளில் நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்குமென்று தெரிய வருகின்றது

இதே வேளை எத்தனை புதிய சட்டதிட்டங்களைக் கொண்டு வந்தாலும், விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாதென்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். புதிய புதிய வடிவங்களில் புலிகள் தாக்குதல் நடத்துவதால், இத்திட்டம் பயனற்றதாக இருக்குமென்று தெரிவிக்கப்படுகிறது.

### வாணிபம்
1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேள்ளும்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவுவாரியாக வழங்கப்பட்டிருந்த காலம் 30 -- 11 – 92 வரை நீடிக்கப்பட்டுள்ளது

ஆகவே இதுவரை பதிவு செய்யாதவர்களை இவ்வாய்ப்பைப் பயன்படுத்திப் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்வதுடன் பதிவு செய்யாத எந்தவொருவாணிபமும், தொழில் முயற்சியும் தொடர்ந்தியங்க இசைவளிக்கப்படமாட்டாது என்பதையும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்

இதற்குரிய படிவங்கள் இன்று முதல் 30-ம் திகதி வரை (27 – 11 - 92 தவிர) காலை 9-00 மணிமுதல் மாலை 5-00 மணிவரை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ் மாவட்ட வருவாய்ப் பகுதிச்செயலகத்தில் மட்டுமே வழங்கப்படும். முன்போல் தென்மராட்சி வடமராட்சி உபசெயலகங்களில் வழங்கப்படமாட்டாது தனியார் கல்வி நிறுவனங்களும் 30–11-92ற்கு முன் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றன.


## புதிய வகுப்புகள்

புதிய கல்வி நிலயம்,

219, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

கல்வி ஆண்டு 1993 ஆண்டு 4 முதல்

ஆண்டு 11 வரை (சகல பாடங்களும்)

★ திறமை, அனுபவமிக்க யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை. ஆண்டு 5 புலமைப் பரிசில். ஆண்டு 6 அனுமதிப் பரீட்சைக்குப் பெயர்பெற்ற நிறுவனம்.

**ஆரம்பம்: 01 - 12 - 92 (செவ்வாய்) பி. ப. 3-00 மணி**

குறிப்பிட்டளவு மாணவர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவர். அனுமதிக்கு முந்துங்கள்.

(சி-6998) நிர்வாகி.


**வீட்டுக்கொருவராய் போராடப் போவோம்**

**வெட்டவெளி எங்கும் மரமாய் நடுவோம்**

### வெளி மாவட்டங்களிலிருந்து

# கொழும்பு செல்பவர்களுக்கு விசேட அடையாள அட்டை

(கொழும்பு)

வெளி மாவட்டங்களிலிருந்து கொழும்புக்கு வருபவர்களுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்குவதற்கு பாதுகாப்பு அதிகாரிகள் ஆலோசித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் திடீர் திடீரென்று குண்டுகள் வெடிப்பதற்கு குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து வருபவர்களாலேயே கூடுதலாக நடைபெறுவதற்கு சாத்தியக்கூறுகள் இருப்பதாக அதிகாரிகள் கருதுவதினால் இப்புதிய அடையாள அட்டை முறை விரைவில் நடைமுறைக்கு வரக்கூடுமென்றும் கருதப்படுகின்றது.

புதிய அடையாள அட்டை நடைமுறைக்கு வந்தால் சமாதான முயற்சிகளுக்கு பெரும் குந்தகங்கள் ஏற்படக்கூடுமென்றும் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தும் உள்ளார்கள். (வி)

## வரலாறுய் வாழ்வோர்

முடி கொண்டு அரசாண்ட
தமிழனின் புகழ் மீண்டும்
முன்போல ஒளி வீசிட
படை கொண்டு களம் சென்று
பகை வென்று உயிர் தந்த
பைந்தமிழ்ச் செல்வர் வாழ்க!

இருள் சூழ்ந்த நம்மண்ணில்
விடி வெள்ளி இறை தோன்ற
இன் தமிழ் கோலோச்சிட
வரும் சாலை எதிர்கொண்டு
வளநாடு தனை மீட்டும்
வரலாற்றில் வாழ்வோர் வாழ்க!

அடிமைகளாகி கை
விலங்கோடு தமிழ் மக்கள்
அலைகின்ற சொந்த மண்ணின்
சிலையான மௌனத்தைச்
சிதைக்க உயிர் தந்து
சிலையான மாவீரர் வாழ்க!

— நெடுந்தீவு லக்ஸ்மன்

## மாதாந்த உதவிப்பணம்

(உடுவில்)

வலிகாமம் வடக்குப் பகுதி மக்களின் அக்டோபர் மாதத்துக்குரிய பொதுசனமாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவுகள் தற்போது தபாலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. 109

## சூட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

கொக்கட்டிச் சோலைப் பகுதியின் முன்னாள் ஈ.பி.ஆர். எல். எவ். உறுப்பினரான கணபதிப்பிள்ளை சந்திரசேகரம் என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார் (சி)

## மோதல்

(கொழும்பு)

வெற்றிலைக்கேணியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாக கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்ததாக செய்திகள் கூறுகின்றன. (சு)

## மனநோயாளர் சிகிச்சை நிலையம்

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை மனநோயாளர் நலன்புரிச்சங்கத்தின் பெயர் ''உள நலச் சங்கம்'' என்று பெயர் மாற்றம் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள மனநோயாளர்களின் நலன் கருதி நீண்டகாலமாக மனநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான நிலையம் ஒன்றும் மேற்படி சங்கத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கலை நிகழ்ச்சி ஒன்றின் மூலம் சேகரிக்கப்பட்ட 54 ஆயிரம் ரூபா நிதி இதற்காக பயன்படுத்தப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (72)

## மாவீரர் வார ஏற்பாடுகள்

### அலங்கார வளைவுகள்

(அரியாலை)

யாழ். பிரதம தபாலகம்–யாழ். ரயில் நிலையச்சந்தி ஆகியவற்றில் மாவீரர் வாரத்தையொட்டி அலங்காரவளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

புகையிரத நிலையத்துக்கு முன்பாகவும் வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன ரயில் நிலையச் சந்தியிலுள்ள வளைவு நயினாதீவு–புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் மூலமாகவும் அங்குள்ள கொடிச்சிலை யாழ். தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கத்தாலும் வழங்கப்பட்டுள்ளது [59]

### மரம்நாட்டு வைபவம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு சனசமூகநிலையம் இந்து இளைஞர் மன்றம் ஆகியன கூட்டாக இணைந்து சனசமூக நிலைய முன்றலில் அலங்கார வளைவு அமைக்கும் வேலையிலும் வீதிகள் சிரமதானப் பணி மூலம் செப்பனிடும் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்

நிலையக் காணிக்குள்ளும் வீதியோரங்களிலும் மரம் நாட்டும் வைபவமும் மாவீரர் தினத்தை முன்னிட்டுச் சிறப்பாக இடம்பெற்றுள்ளன. [154]

### சிரமதானப்பணி

(கொழும்புத்துறை)

யாழ். மதுவரித் திணைக்கள ஊழியர்கள் சகலரும் ஒருங்கிணைந்து அலுவலகம் உள்ள காணிப்பகுதியைச் சிரமதானப்பணிமூலம் துப்பரவு செய்துள்ளனர்

மாவீரர் வாரத்தை முன்னிட்டு இவ் அலுவலக சுற்றாடல் பகுதியாவும் செப்பனிடப்பட்டுவளது. [154)

### மாவீரர் திருவுருவப்படங்கள்

[கொழும்புத்துறை]

மாவீரர் வாரத்தை முன்னிட்டு மாவீரர் திருவுருவப் படங்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதான சந்திகளில் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் வைத்து மலர் தூவி, படங்களுக்கு பூமாலை சூட்டி தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தி வருகின்றனர். [154]

### அலங்கார பந்தல்

(நெல்லியடி)

மாவீரர் தினத்தை முன்னிட்டு இன்பருட்டி காண்டீபன் விளையாட்டுக்கழகம், கிராம முன்னேற்றச் சங்கம், சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் கடற்றொழிலாளர் சங்கங்கள் ஆகியன ஒருங்கிணைந்து அப்பகுதியில் பெரிய அலங்காரப் பந்தல் ஒன்று அமைத்துள்ளனர்.

105 அடி நீளமும், 25 அடி அகலமுமுடையதான இப் பந்தலில் வர்ணங்களினால் அலங்கரிக்கப்பட்டு 250க்கு மேற்பட்ட மாவீரர்களின் படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. (160)

### சாவகச்சேரியில்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபை ஊழியர்கள் நேற்றுமுன் தினம் மாவீரர்தின ஆரம்பநாளன்று சனிக்கிழமை சாவகச்சேரியில் மாவீரர் நினைவாக சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

### பாடசாலை சுற்றுடல் சுத்திகரிப்பு

(தலையடி)

மாவீரர் வாரத்தினை முன்னிட்டு கடந்த திங்கள் செவ்வாய் ஆகிய நாட்களில் உடுத்துறை மகா வித்தியாலயம், மருதன்கேணி இந்து த. க. வித்தியாலய மாணவர்கள் பாடசாலைச் சுற்றுடல்களைத் துப்புரவு செய்ததுடன், மரக்கன்றுகளும் நாட்டினர். புதன் கிழமை தாளையடி றோ. க. வித்தியாலய மாணவர்கள் பாடசாலைச் சுற்றுடல் தாளையடி சந்தியில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத் தூபிகள். திருவுருவப்படங்கள் அமைந்துள்ள இடங்களையும் துப்புரவு செய்தனர்.

வெள்ளியன்று ஆழியவளை சீ. சீ. பாடசாலை, செம்பியன்பற்று றோ. க. த. க. பாடசாலை மாணவர்கள், மாவீரர் படங்கள் வைக்கும் பந்தல் மேடை அமைந்துள்ள பகுதி, பாடசாலை சுற்றுப்புறம் ஆகியவைகளை துப்புரவு செய்தனர். தொடர்ந்து மாவீரர் வாரத்தில் சிரமதானம் செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (163)

## சிறுவர் பாடசாலை

(மானிப்பாய்)

மானிப்பாய் அகதி முகாம்களில் தங்கியுள்ள சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காக தமிழர் புனர்வாழ்வு நிறுவனம் அம்முகாம்களில் சிறுவர் பாடசாலைகளை திறந்துவைத்துள்ளது. (71)

## விசேட பொதுக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி, சந்தைப்படுத்தல், நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 28-ம் திகதி சனிக்கிழமை யாழ் பிரதான வீதியிலுள்ள சமாஜ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [72]

## 8000 அதிபர்களுக்கு முகாமைத்துவ பயிற்சி

(கொழும்பு)

8,000 2-ம், 3-ம்தர அதிபர்களுக்கு உலகவங்கியின் உதவியுடன் முகாமைத்துவப்பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

1993 ஜனவரி தொடக்கம் மாகாணமட்டத்தில் இப்பயிற்சியை அளிப்பதற்கு உயர் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது.

இப்பயிற்சியை நடத்துவதற்கென உள்ளூரிலும், வெளிநாட்டிலும் 28 போதனா ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாடசாலைகளை மேற்பார்வை செய்யும் நடவடிக்கைக்காக உலக வங்கி ஒருகோடி பத்து லட்சம் ரூபா பெறுமதியான முப்பது வாகனங்களை இலங்கை அரசுக்கு வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ரி)

## 3 குழந்தைகள் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலை சிறுவர் சிகிச்சை விடுதிகளில் செப்ரிசிமியாவினாலும் வயிற்றோட்டத்தினாலும் நேற்றுமுன்தினம் மூன்று குழந்தைகள் இறந்துள்ளன.

யாழ் பாணம் மணியம் தோட்டம் உதய புரத்தைச் சேர்ந்த இராசையா கலைவாணி (5 வயது) என்ற சிறுமி செப்ரிசிமியாவினாலும் வயிற்றோட்டத்தினால் ஏழாலை மேற்கைச் சேர்ந்த க. கஜேந்திரன் என்ற ஒன்பது மாதக் குழந்தையும், உடுப்பிட்டி பழைய விதானையார் ஒழுங்கையைச் சேர்ந்த பா. அஜிதரன் 6 வயது என்ற சிறுவனும் பலியானார்கள் (56)

## சண்டிலிப்பாயில் இடம்பெயர்ந்தவர்களுக்கு 500 கொட்டில்கள்

(வட்டுக்கோட்டை)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினால் 500 கொட்டில்கள் பூர்த்தி செய்யப்பட்டு. இராணுவ நடவடிக்கைகளினால் மாதகல், இளவாலை, தெல்லிப்பழை, பண்டத்தரிப்பு, சில்லாலை முதலான இடங்களிலிருந்து இடம்பெயர்ந்துமானிப்பாயில் பொது இடங்களில் தஞ்சமடைந்திருந்த அகதிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சுகாதார வசதிகள், நிவாரண வசதிகளை கட்டுடையில் இயங்கிவரும் அகதிகள் புனர்வாழ்வுநிறுவன உத்தியோகத்தர்கள் செய்து வருகின்றனர்.

இங்குக் கொட்டில்களில் தங்கியுள்ள சிறுவர்கள் படிப்பதற்காக முகாம்கள் தோறும் பாலர்பாடசாலைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. (139)

## மாவீரர் நினைவுதின கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட கோட்ட மட்டத்தில் இன்று நடைபெறும் கூட்டங்களின் விபரம்:

நல்லூர் – கந்தர்மடம் சைவப்பிரகாசா. உடுவில்– இணுவில் பரராஜசேகரபிள்ளையார் கோவில் தென்மராட்சி எழுதுமட்டுவாள் சிறிகணேசா பாடசாலை, நாவற்குழி ம. வி வடமராட்சி இமையாணன், நாவலடி, நாவலர் ச. ச. நி. பருத்தித்துறை சிவன்கோவில் யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயம்.

கடற்புலிகள் – வலிவடக்கு பருத்தித்துறை பழைய பஸ் நிலையம், வலி கிழக்கு மணற்காடு த. க. பாடசாலை, (சி)

## விவசாயிகளுக்கு நல்ல இன விதைகள் விநியோகிக்க ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாண மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின சமாஜம் அண்மையில் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் விவசாயிகளின் நலன் கருதி வெளிநாட்டு நல்ல இன விதைகளை இங்கு கொண்டு வந்துள்ளது.

கலிபோர்னியாவில் உற்பத்தி செய்யப்பட்ட பீற்றூட் விதைகள் மற்றும் கோவா கரட், கறி மிளகாய், நீட்டு முள்ளங்கி, சவுதி பூசணி போன்ற பல்வேறு வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட தகரத்தில் அடைக்கப்பட்ட விதைகளை விவசாயிகள் யாழ். பிரதான வீதியிலுள்ள சமாஜ செயலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (72)

## தொழுநோய் ஆய்வு

(புலோலி)

நாகர் கோவில் அகதிமுகாமில் உள்ளோர் மீது தொழுநோய் பற்றிய ஆய்வு இம் மாதம் 28ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். பிராந்திய சுகாதார சேவைத் திணைக்களத்தின் தொழுநோய் தடுப்புப்பிரிவு மேற்கொண்டுள்ளது. (61)

---

☆ தமிழீழ மாவீரர் நாள் — 1992

## மாவீரர்களே!

காவியமான மாவீரர்கள் எங்கே? — உன்
கண்களில் அல்லவோ ஆடுகிறார் இங்கே
ஆயிரம் தடவைகள் பாடை வராது — களம்
ஆடவர! வந்தால் தோல்வி இராது.

— தமிழீழ மாவீரர் பணிமனை

● போஷாக்கின்மையால்

# 40,000 குழந்தைகள் தினமும் மடிவு

(கொழும்பு)

உலகில் ஒரு நாளைக்கு 40,000 குழந்தைகள் போஷாக்கின்மையால் மரணமடைகின்றார்கள் என்று உலக விவசாய ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இதேவேளை கோடிக்கணக்கான மக்கள் பட்டினியால் மரணமடைகிறார்கள் என்றும் 78 கோடி மக்கள் போஷாக்கின்றி இருப்பதாகவும் உலக விவசாய ஸ்தாபனம் தனது அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது. (சு)

★ யாழ். பல்கலைக்கழகத்தில்

# முகாமைத்துவ பாடம் தனித்துறையாக இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவப் பாடநெறி இனிமேல் தனித்துறையாக விளங்கும். இதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வழங்கியுள்ளது.

இதேவேளை தொழிலாளர் கல்வி நெறியும் தனி அலகாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியும் பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து கிடைத்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத்திற்கு மேலதிகமாக இரு விரிவுரையாளர்களை நியமிப்பதற்கும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. (159)

★ அதிபர் சபாரத்தினம்

# யாழ். இந்துக்கல்லூரியின் பெருமையை உயர்த்தியவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பெருமையை உயர்த்திய பெருமைக்குரியவர் மறைந்த பெரியார் அதிபர் சபாரத்தினம். அன்னாரது ஆற்றலை ஆளுமையை, பொருத்தமான சொற்களை பொருத்தமான நேரத்தில் பேசி மனம் நோகாமல் காரிய மாற்றும் சொற்திறன் மிக்க ஒருவரை இன்று இழந்துவிட்டோம். அன்னாரது இழப்பு ஈடுசெய்யமுடியாதது.

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர் எஸ். சிவராஜலிங்கம் மறைந்த அதிபர் என். சபாரத்தினம் அவர்களின் அஞ்சலிக்கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார். இவ் அஞ்சலிக்கூட்டம் அன்னாரது தகனக்கிரியைகள் நடைபெறமுன்னர் கோம்படையன் மணல் மயானத்தில் நடைபெற்றது.

அன்னாருக்கு இறுதி மரியாதை செலுத்துமுகமாக யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மாணவர்கள் நீண்ட கியூவில் அணிவகுத்து நின்று அஞ்சலி செலுத்தினர். (எஸ்.)

ஒய்வூதிய வவுச்சர்களை

# யாழ். செயலகத்தில் தயாரிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அரச, திணைக்களங்களிலிருந்து 1-12-92ம் திகதிக்குப் பின்பு ஓய்வுபெறும் ஊழியர்கள் அனைவரினதும் பென்ஷன் வவுச்சர்கள் அனைத்தும் யாழ். செயலகத்திலேயே தயாரிக்கப்படும், என்று யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

1-12-92ம் திகதிக்குப் பின்பு வெளி மாவட்டங்களிலிருந்து ஓய்வு பெறும் ஊழியர்களுக்கும் தமது ஓய்வூதியத்தை யாழ். மாவட்டத்தில் பெற விரும்பினால் தமது தஸ்தாவேஜுக்கள் அனைத்தையும் யாழ். செயலகத்தில் புதிதாகத் திறக்கப்படஇருக்கும் ஓய்வூதிய கணிப்பீட்டுக்கிளைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மேற்படி திகதிக்கு முன்பு தமது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் அனைவரினதும் பென்ஷன் வவுச்சர்களும் வழமைபோல் கொழும்பிலிருந்தே இங்கு வரும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (வி)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் ந. சபாரத்தினம்

(முன்னாள் அதிபர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

அன்னாரது பிரிவையொட்டி அவர் தம் பிரிவால் வாடும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அநுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

யாழ். இந்துமகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
23-11-1992. (சி-7001)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a New Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10336/8

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## சுழிபுரம் பகுதியில்

காட்டுப்புலம், குடாக்கனை, பாண்டவெட்டை, வறுத்தோலை. இருத்தலடி, மற்றும் வயல் வெளிகள் கடற்கரையோரப் பகுதிகளிலும் பனிப்புலம், பண்ணாகம், வழக்கம்பரை. பொன்னாலை, பகுதியிலும் வீழ்ந்து வெடித்து பெரும் சத்தங்களை ஏற்படுத்தி மக்களை நடுநடுங்கச் செய்தன.

# 40,000 மக்கள் இடம்பெயர்வு

இச் ஷெல் தாக்குதலையும், இராணுவம் முன்னேறி வருவதாக எழுந்த வதந்திகளையுமடுத்து சுமார் எண்ணாயிரம் குடும்பங்களை சேர்ந்த 40,000 மக்கள் வீடு வாசல்களை விட்டு பெட்டி, படுக்கைகளுடன் வெளியேறி ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்து வந்து இப்பகுதியில் முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களும் இப்பகுதியில் நிரந்தரமாக இருந்த மக்களும் வழக்கம்பரை அம்மன் கோவில், பண்ணாகம், விக்ரோறியா கல்லூரி, வட்டு. கண்ணகை அம்மன் கோவில். வட்டு இந்துக் கல்லூரி வட்டு அ. மி. த. க. பாடசாலை, சித்தன்கேணி பிள்ளையார் கோவில், சிவன் கோவிலில் தஞ்சமடைந்துள்ளனர்.

# இறந்தவர் சடலங்கள் தகனம்

ஷெல் தாக்குதலில் உயிரிழந்தோரின் சடலங்கள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் வைக்கப்பட்டு பின்னர் தகனம் செய்யப்பட்டது சடலங்கள் தகனம் செய்யப்பட்டபோது இறந்தவர்கள் பலரது நெருங்கிய உறவினர்கள் இல்லாதபோதும் பொதுமக்கள் பலர் இச்சடலங்களை தகனம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது நேற்று இடம்பெற்ற இந்த சோக சம்பவத்தால் வயோதிபர்களும், சிறுவர்களும். பெண்களும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர்.

# கப்பலிலிருந்து பீரங்கி தாக்கு

படை முகாம்களிலிருந்து அகோர ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டுக்கொண்டிருந்த வேளை திருவடிநிலை, மாதகல் கடலிலிருந்து சுழிபுரம் பகுதியில் குடியிருப்புக்களை நோக்கி கடும் பீரங்கித் தாக்குதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது.

# அகதிகளுக்கு துரித உதவி

ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்தோர்களுக்கு அவ் அவ் பகுதி கிராம உத்தியோகத்தர்கள் சமைத்த உணவை வழங்கினார்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினரும் காயமடைந்தவர்களை வைத்தியசாலைகளுக்கு கொண்டுசெல்வதற்குரிய வாகன வசதியை ஏற்படுத்திக் கொடுத்தனர்

சங்கானை உதவி அரசாங்க அதிபர் செல்வி றூபினி கனகரத்தினம் ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தங்கியிருப்பவர்களுக்கு வேண்டிய உதவிகளை மேற்கொண்டார். (137, 56, 139, 72 - சி)

# சிறிமாவின் முடிவிற்கு நீதிமன்று தடையுத்தரவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலர் திரு சூரியப்பெருமாவை கட்சியிலிருந்து நீக்கும் கட்சித்தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் முடிவுக்கு கொழும்பு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு போட்டுள்ளது.

கட்சியிலிருந்து தம்மை நீக்க கட்சித்தலைமைப்பீடம் எடுத்த முடிவுக்கு எதிராக இவர் கொழும்பு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இதனையடுத்தே இத்தடை உத்தரவைக் கொழும்பு நீதிமன்றம் பிறப்பித்தது. (சி)

## மண்டைதீவிலிருந்து ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் யாழ் நகரை நோக்கி நேற்று நண்பகல் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இராணுவத்தினர், நேற்று பகல் 11.15 மணியளவில் அடுத்தடுத்து ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டார்கள். இதில் இரு ஷெல்கள் கோட்டைப் பகுதியில் விழுந்து வெடித்தது. (வி)

# 10,000 அடையாள அட்டை குமணவில் வருகிறது

[நல்லூர்]

யாழ். மாவட்டத்திலிருந்து அஞ்சல் அடையாள அட்டைகளைப் பெற விண்ணப்பித்தவர்களுக்கு அவற்றை வழங்குவதற்குமுன் நடவடிக்கைகளை வடமாகாண தபால் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. எனினும் குமண கப்பலில் அவற்றிற்குரிய நிரப்பப்படாத அடையாள அட்டைகள் வந்தவுடனேயே பதிவுசெய்யப்பட்டு விநியோகிக்கப்படும் எனவும் தெரியவருகிறது.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவ மன்னார், யாழ்ப்பாண மாவட்டங்களை சேர்ந்த 7,055 பேர் இதுவரை அஞ்சல் அடையாள அட்டைகளைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளனர். குமணவில் 10,000 வெற்று அடையாள அட்டைகள் இங்கு எடுத்துவரப்படுகிறது.

க. பொ. த. சாதாரண பரீட்சார்த்திகளின் நன்மை கருதி துரிதகதியில் இவை யாழ். குடாநாட்டினுள் விநியோகிக்கப்படுமெனவும் ஏனைய மாவட்டங்களுக்கு அனுப்புவதற்கு சிரமம் ஏற்பட்டுள்ளதெனவும் அதை நிவர்த்தி செய்யத் தாம் முயற்சிப்பதாகவும் வடமாகாண தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (158)

## மாவீரர் வார விழா

(யாழ்ப்பாணம்)

கப்டன் அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு மாவீரர்வார விழா இன்று பி. ப. 4 மணிக்கு வாதரவத்தை அக்காச்சி கிராம மைதானத்தில் திரு. சிறிக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில், பொதுஸ்தாபனம், பாடசாலை ஆகியவற்றின் பிரதிநிதிகளும் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களும் கருத்துரையும் எழுச்சியுரையும் வழங்குவார்கள் மேலும் கலை நிகழ்ச்சியும் நடைபெறும்.

## துப்பாக்கி நபர் அடையாளம் காணப்பட்டார்

(கொழும்பு)

ஜனாதிபதியின் செயலாளரின் மெய்ப் பாதுகாவலரை சுட்டு படுகாயப்படுத்திவிட்டு தப்பியோடிய இரு வாலிபர்களில் ஒருவர் இனங்காணப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

யோகன் (வயது 22) என அழைக்கப்படும் இவர் வல்வெட்டித்துறையை சேர்ந்தவர் எனவும் மற்றைய நபரை தேடும் முயற்சியில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர். (க)

சித்த மருத்துவ மாணவர்

## மீண்டும் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைத் தலைவர் மீண்டும் பதவிஏற்கும் வரையும், சித்த மருத்துவத்துறையின் எதிர்காலம் பற்றி துணைவேந்தர் திருப்தியான பதில் தரும் வரையும்யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை மாணவர்கள்மீண்டும் நேற்றுத் தொடக்கம் பகிஷ்கரிப்பை ஆரம்பித்துள்ளார்கள். என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முடிவை சித்தமருத்துவ மாணவர் மன்றத்தினர் நேற்றுக்காலை எடுத்தார்கள். (சு)

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில், திட்டமிட்டபடி 23ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நடத்தவிருந்த பரீட்சைகள் தவிர்க்கமுடியாதகாரணத்தால் நடத்தமுடியவில்லை எனவும், ஆண்டு-3,4,5க்கான பரீட்சை 30-11-92, 1-12-92ல் நடைபெறும். ஆண்டு-6,7,8க்கான பரீட்சை 30-11-92 தொடக்கமும், ஆண்டு-9, 10க்கான பரீட்சை 18-12-92 தொடக்கமும் நடத்தப்படும்.

## புதிய சங்கம்

கொழும்புத்துறை

பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சனசமூக நிலைய மண்டபத்தில் பாஷையூர் ஐக்கிய சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. (154)